AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 14

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும் மார்ச் 16முதல் 31வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## நரசிம்மருக்கும் பிரதோஷ வழிபாடு

★ சுப்ரமணிய எந்திரம் ★ அரிய ஆன்மீக தகவல்

★ அதிசய ஆலயம் ★ கோமதி சக்கரம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



இந்து மதம் என்கிற சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துமே அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது இந்து தர்மத்தில் இலைகளுக்குக் கூட ஆற்றல் உள்ளது என்பதை மேல் நாட்டு அறிஞர் ஒருவர் அறிவியல் பூர்வமாக நிரூபித்துதிருக்கிறார்.
குறிப்பாக துளசி இலைக்கு உள்ள ஆற்றல் ஏகாதசி நாளில் பல மடங்கு சக்தியைப் பெறுகிறது. வில்வ இலை சிவ ராத்திரி இரவில் அபரிமிதமான சக்தியுடன் விளங்குகிறது என்பதை அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆணித்தரமாக நிரூபித்துள்ளார்.
இவைகளின் இந்த ஆற்றல் மனிதனிடத்தில் பல நல்ல தாக்கங்களையும் ஏற்படுத்துவதாய் கண்டறியப்பட்டுள்ளது.

~ Dr. Baskaran Pillai

நமது ‘சத்வித்யா’ இதழின் மார்ச் மாத இரண்டாம் பதிப்பு இது! மக்கள் அனைவரும் ஆன்மீக சிந்தனையில் திளைத்து மாசி மாதத்தின் ஆலய விழாக்கள் அனைத்திலும் பங்கு கொண்டு ஆண்டவன் அருளில் திளைத்திருப்பீர்கள்.
நல்ல சிந்தனைகளும் ஒழுக்க நெறிகளுமே நமது வாழ்வினை உயர்த்தும் என்பதையே ஆன்மீக நூல்களும் ஆன்ற பெருமை கொண்ட ஞானிகளும் காலகாலமாய் நமக்கு உணர்த்தும் பாடமாகும்.
சிவ நெறி சிந்தையை தெளிவாக்கும், அது ஞானத்தையும் முக்தியையும் கொடுக்கும்! வைணவ நெறிகள் செல்வம் பெருகிடச் செய்து பரமபதம் அளிக்கும்! யார், எந்த வழியில் சென்றாலும் சேரும் இடம் என்னவோ ஒன்று தான் என்பதே நல்லிதயங்களின் நயத்தகு சிந்தனையாகும். புன்மை மறந்து புண்ணியம் நாடுவோம்! இறை பணி செய்து இன்பத்தில் திளைப்போம்!



(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# அதிசய ஆலயம்

ஒரு சிவாலயம், திங்கட்கிழமைகளில் இரவு 12 மணிக்கு திறக்கப்பட்டு 1 மணி வரை மட்டுமே ஆராதனை செய்யப்பட்டு, பக்தர்களால் வணங்கப்படுகிறது.

இப்படி வாரம் ஒரு நாள் 1 மணி நேரம் மட்டுமே பக்தர்கள் தரிசனம் செய்யும் கோவில், பட்டுக் கோட்டைக்கு அருகிலே பரக்கலக்கோட்டை என்னும் ஊரிலே உள்ள பொதுவுடையார் கோவிலாகும் ஒரு மிகப்பெரிய ஆலமரத்தின் அடிப்பகுதியே சிவலிங்கமாக கருவறையில் ஆராதிக்கப்படுகிறது.

இறைவன் ஈசனிடம் இரண்டு முனிவர்கள் நியாயம் வேண்டி முறையீடு செய்ய வந்தனர். அவர்களுக்கு நடுநிலையோடு அதாவது பொதுவாக நின்று தீர்ப்பளித்ததால் இந்த இறைவனுக்கு பொதுவுடையார் என்று பெயர்!

திங்கட்கிழமை தோறும் இரவு 1 மணி நேரம் மட்டுமே திறந்திருக்கும் இந்த ஆலயம் வருடத்தில் மஹா சிவராத்திரி நாளில் முழுவதும் திறந்திருக்கும்.

வழக்கு, கோர்ட் என்று அலைபவர்கள் இந்த தலத்திற்கு வந்து திங்கட்கிழமைகளில் தரிசனம் செய்வது சிறந்த பலனைத் தரும்.





~ ரா. பன்னீர்செல்வம்

# திருமணத் தடையை நீக்கும்

# பங்குனி உத்திர விரதம்

பௌர்னமி திதியும் உத்திர நட்சத்திரமும் சேர்ந்து பங்குனி மாதத்தில் வரக்கூடிய நாளே பங்குனி உத்திரம் என்று அழக்கப்படுகிறது. இந்த வருட பங்குனி உத்திர நன்நாளானது பங்குனி மாதம் 15 ஆம் நாள் மார்ச் மாதம் 28 ஆம் தேதி அன்று மிகுந்த சிறப்புக்கள் நிறைந்த நாளாக வருகிறது. இந்த பங்குனி உத்திர நாள் அன்று திருமணம் மற்றும் காதலுக்கு காரக கிரகமான சுக்கிரன் உச்ச பலத்துடன் மீனத்தில் சஞ்சாரம் செய்வது இந்த வருடம் வரும் பங்குனி உத்திர நாளின் சிறப்பு அம்சம் ஆகும்.



பங்குனி உத்திர நன்நாளில் தான் தேவலோக தெய்வத்திருமணங்கள் நடந்துள்ளன. இந்த நன்நாளில் தான் கௌமார சமயத்தின் கடவுளான முருகப் பெருமானின் அவதார நோக்கமான சூரனை சம்ஹாரம் செய்ததிற்கு உபயமாக இந்திரன் தனது மகள் தெய்வசேனையை மணமுடித்து கொடுத்தது இந்த பங்குனி உத்திர நன் நாளில் தான். சிவன் மற்றும் பார்வதியின் திருமணம், ரெங்கநாத பெருமாள் மற்றும் ஆண்டாள் திருமணம், சீத்தா மற்றும் ராமன் திருமணம் போன்ற கடவுள்களின் திருமணமும் இந்த மங்கள நாளில் தான் நடந்தேறி உள்ளன. எனவே இந்த நன்நாளை திருமண யோகம் தரும் சுப நாள் என்றும் அழைக்கிறார்கள். இந்த நாளில் திருமணம் ஆகாத ஆண்களும் பெண்களும் பங்குனி உத்திர தினத்தன்று அதிகாலை எழுந்து குளித்து. வீட்டில் விளக்கேற்றி முருகப்பெருமானை வணங்க வேண்டும். கந்த சஷ்டி கவசத்தை நாள் முழுக்க படிப்பது சிறப்பு. அப்படி படிக்க முடியாதவர்கள் "ஓம் சரவண பவ" என்னும் மந்திரத்தை நாள் முழுவதும் உச்சரித்து, ஒரு வேளை மட்டும் உணவு அருந்தி, மாலையில் முருகன் கோவிலுக்குச் சென்று முருகனுக்கு நெய் தீபமேற்றி வழிபட்டு வந்தால் திருமண தடை மற்றும் தாமதம் நீங்கி திருமணம் கை கூடும். மேலும் கணவன் மனைவி உறவில்பிரச்சனை உள்ளவர்களும் இந்த பரிகாரத்தை இந்த அற்புதமான பங்குனி உத்திர நன்நாளில் செய்தால் கனவன் மனைவிக்கு இடையே அன்யோன்யம் கூடி மனமொத்த தம்பதிகளாக இணைபிரியாது இருப்பர் என்பதில் சந்தேகமே இல்லை.


~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# சிவ நாகலிங்க சித்தர்

நம்ம 'சத்வித்யா' நேயர்களுக்கு ஏற்கனவே நாம சொல்லியிருந்தோம். சித்தர்களோட ஜீவசமாதிகள் காடு, மலை, குகைகளில் மட்டும் இல்ல! சென்னை போன்ற நகரங்களிலும் சித்தர்கள் இருந்திருக்காங்க, சிரமப்படற மக்களுக்கு எண்ணற்ற நன்மைகள செய்திருக்காங்க!

அந்த வகையில இந்த இதழ்ல நாம பார்க்கப்போற சித்தரோட ஜீவசமாதியும் சென்னையில இருக்கிறது தான்?

சென்னையோட முக்கிய பகுதியான பெரம்பூர் பகுதியில நெருக்கமான குடியிருப்புகள் அடர்ந்திருக்க கூடிய மிக சாதாரண மக்கள் வசிக்கிற இடத்துல இருக்கறது தான் சிவநாகலிங்க சித்தரின் ஜீவசமாதி!



யார் இவர்? இவர் செய்த சித்து வேலைகள் என்ன?

இங்க இருக்கற மக்கள் மத்தியில இந்த சித்தருக்கு இருக்கற பக்தி எப்படிப்பட்டது?

இந்த ஜீவசமாதியோட சிறப்புகள் என்ன?

இதையெல்லாம் இந்த பகுதியில பார்க்கலாம்.

இந்த ஜீவசமாதியின் மீது எல்லோருக்கும் ஈர்ப்பு ஏற்பட காரணம், இந்த பகுதி மக்கள் தம்பதி சமேதரா குடும்பத்தோடு வந்து வணங்குவது தான் இப்படி குடும்பத்தோடு வந்து வணங்கும் அளவுக்கு இந்த சித்தரிடம் அப்படி என்ன அற்புத ஆற்றல் இருக்கிறது? என்ற கேள்வியே வெளியுலகம் இந்த ஜீவசமாதியை நாடிவரக் காரணமாய் அமைந்துள்ளது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால், ஆங்கிலேயர் ஆண்ட போது இந்த பகுதிக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து வந்தவர் தான் இந்த சிவநாகலிங்க சுவாமிகள்!

இப்ப, இந்த ஜீவசமாதி கோயில் அமைந்திருக்கும் இந்த இடத்தில் தான் அவர் தங்கியிருந்துள்ளார்! இங்கே ஒரு பெரிய அரசமரம், உயரமாக படர்ந்து, விரிந்து காட்சியளிக்கிறது. அன்ணாந்து பார்த்தால் அரசமரம் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் பிரம்மாண்டமாய் நிழல் தந்து கொண்டிருக்கிறது. இங்கே நாம் எதிர்பாராத அதிசயக் காட்சி ஒன்று நம் கண்முன்னே விரிகிறது.

அது என்னவென்றால்......?

மூன்று பேர் கட்டியணைத்தால் கைக்கொள்ளும் அளவிற்கு பருமனுடன் காணப்படும் இதனுடைய அடிப்பகுதி வேர்கள் அடர்ந்து காணப்படுகிறது் இதிலும் ஓர் அதிசயம் என்னவெனில், ஒரு பிரம்மாண்ட மரத்தின் வேர் தான் இது என சொல்ல முடியாத அளவுக்கு மிகப் பெரிய நாகங்கள் பல ஒன்றிணைந்து

பின்னிப் பிணைந்திருப்பது போன்ற வேரின் அமைப்பு, வினோதமாகவே பார்க்கப்படுகிறது்
மகான் சிவநாகலிங்க சித்தர் இளைப்பாறிய மரத்தடி! அவருடைய கைப்பட்டு, கால்பட்டு புண்ணியம் சேர்ந்த புனித இடம்! எல்லோராலும் வணங்கத்தக்க வடிவத்திலே அமைந்திருக்கும் இந்த அரசமர அடிப்பகுதி, சித்தரின் கருணையை மொத்தமாய் வழங்குகின்ற வல்லமை பெற்றது என்பதனை நன்றாகவே உணர முடிகிறது.
இந்த அரச மரத்தின் அருகிலே, மிகச் சிறிய அளவில் அமைந்துள்ள ஜீவசமாதி கோயில் சிவநாகலிங்க சித்தரின் கருணையை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை மறுக்கவே முடியாது்

ஏனென்றால்......
கருவறையில் சிவநாகலிங்க சித்தரின் சிலை அமைக்கப்பட்டிருந்தது, ஆனால், சித்தரின் திருமேனியை முழுமையாக காணமுடியா வண்ணம் முழுக்க முழுக்க விபூதியால் சூழப்பட்டிருந்தது. உண்மை என்னவெனில், விபூதியைக் கொண்டே சித்தரின் திருமேனி வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை யாரேனும் சொன்னால் தான் தெரியும் இதை சித்தரின் விபூதி சிலை என்றே சொல்லலாம்.
சிலையை இப்படி அமைத்திருப்பதின் காரணம் என்ன? அது தான் இந்த சித்தரின் மகிமை!
இந்த சிலையிலிருந்து எடுத்துக் கொடுக்கும் சிறிதளவு விபூதியே மிகப் பெரிய நோய்களையும் குணமாக்கும் அருமருந்தாய் திகழ்கின்றது என்பதே இந்த ஜீவசமாதியின் சித்த ரகசியமாகும்!
இந்த ஜீவசமாதி ஆலயம் சமீபத்தில் தான் புதுப்பிக்கப்பட்டு குட முழுக்கு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, பாழடைந்த நிலையில். எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் இருந்துள்ளது. அந்த நிலையிலும் இங்கு வந்து இந்த சித்தரை வேண்டி நின்றோர், இந்த விபூதியை பூசுகின்ற போது கிட்னி பிரச்சனை, திருமணத் தடை, உடலை உருக்கும் வியாதிகள் என பல பிரச்சனைகள் தீர்ந்துள்ளதை குறிப்பிட்டனர்.
இப்படி, இன்றளவும் தன்னை நாடி வரும் அத்தனை பக்தர்களுக்கும் அருள் மாரி பொழிகின்ற அன்பு மேகமாய் கருணையை அள்ளிவீசும் கடலலையாய் வேதனைகள் தீர்க்கின்றார், சிவநாகலிங்க சித்தர் என்று மக்கள் எல்லோருமே மனதாரப் புகழ்கின்றனர்.
இந்த கருவறையின் ஓரத்தில் கட்டை போன்ற ஒன்று நிலைத்திருப்பதைக் காண முடிந்தது் அது 300 ஆண்டுகளுக்கு முன்பு, சித்தர் இங்கு வருகின்ற போது அவர் கொண்டு வந்து வைத்த சிறிய வேர் என்றும் அது இத்தனை ஆண்டுகளாக மெல்ல மெல்ல வளர்ந்து இப்போது இவ்வாறு காட்சியளிப்பதை சிலாகித்துக் குறிப்பிட்டனர்.

இந்த அரசமரத்தினடியில் அமர்ந்திருந்து, அரசாட்சி செய்கின்ற ஒரு சக்ரவர்த்தியாய், மக்களின் நல்வாழ்விற்கென பரிபாலனம் செய்த மகான், சிவநாகலிங்க சித்தரின் ஆன்மா இன்னமும் இங்கே இருந்து, 'இல்லை' என வருபோர்க்கு இன்பத்தை அள்ளிக் கொடுக்கும் வள்ளலாய் வாட்டங்களை போக்கிக் கொண்டிருக்கிறார்! எளிய மக்களுக்கும் இன்பத்தை நல்கிக் கொண்டிருக்கும் இந்த மகானின் பூமிக்கு சென்று வணங்கி, புண்ணியமும் புனிதமும் பெறுவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# காசிக்கு இணையான கோயில்

வயலும், வயல் சூழ்ந்த பகுதியான மருத நிலமும், கடலும் கடல் சார்ந்த பகுதியான நெய்தல் நிலமும் சங்கமிக்கும் கடலூரில் தென்னந்தோப்பு, மாந்தோப்பு நிறையவே உண்டு. நீர் வளம் சேர்க்கும் ஆறுகளும் உண்டு - பெண்ணையாறு, கெடிலம் ஆறு, உப்பனாறு ஆகிய மூன்று ஆறுகளும் கடலோடு கூடுவதால் கூடலூர் ஆனது! கூடலூர் முதுநகரமே அந்நாளில் துறைமுக நகரமாகவும் மிகச் சிறந்த ஆன்மீக நகராகவும் மிளிர்ந்தது அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள் மற்றும் நால்வர் என தெய்வ நலம் மிக்க அருளாளர்கள் தரிசித்த புனித மண்! கடலூர்! அப்பர் பெருமான் என்று அன்பொழுக அழைக்கப்பெற்ற திருநாவுக்கரசர் சுவாமிகளை கற்றுணை பூட்டி கடலிற் பாய்ச்சிய போதும் நற்றுணையாவது நமசிவாயமே என கரையேறியதும் கடலூரில் தான்!



கரையேற விட்ட குப்பம் என்ற பெயருடைய ஊர் இன்னும் இதே பெயரில் கடலூரில் வழங்கப்படுகிறது. திருஞான சம்பந்தர் தேவாரப்பதிகம் பாடி வழிபட்டடதும் இவ்வூரில் எழுந்தருளிய அருள்மிகு பாடலேஸ்வரர் திருக்கோயிலில் தான்!

ஸ்ரீ ஆதி சங்கரர் இத்தல ஈசனை வழிபட்டதும் புராண கால முனிவர்கள், தேவர்கள், தெய்வங்கள் வழிபட்டதும் அருள்மிகு பெரிய நாயகி உடனுறை அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயிலில் தான்!

பாதிரி மரத்தின் கீழ் உலகம்மை அருந்தவ நாயகியாக எழுந்தருளி உள்ளார்.

ஞானியார் அடிகள் அருந்தமிழ் வளர்த்ததும் கடலூரில் தான். சைவப் பெருநெறியில் செழித்து வளர்ந்த இப்பெருநகரத்தில் தான் திரும்பிய திசையெல்லாம் அருள் மணக்கும் ஆலயங்கள்!

கடலூர் முதுநகரில் ஓர் ஆன்மீக அதிசயம்!

மிகச் சிறந்த சிவத்தலமான' கடல் அலைகள் தாலாட்டும் இராமேஸ்வரம் என்பது நமக்கு தெரியும்! அமைதியான கடலருகே அன்னை சீதையும் அழகும் அருளும் வாய்ந்த ஸ்ரீ ராம பிரானும் மனம் மொழி மெய் ஒன்றுபட சிவ வழிபாடு செய்த புனித மண் இராமேஸ்வரம்!

எவ்வித தோஷமாக இருந்தாலும் அந்த தோஷம் நிவர்த்தியாகும், பிதுர் கடன் புரிவதற்கும்

இராமேஸ்வரத்தை தரிசிப்பது உண்டு அதே பெயருடைய அருள்மிகு இராமநாத ஈஸ்வரர் அம்பிகை பர்வதவர்த்தினியோடு அருட்காட்சி கொடுக்கிற அருள் நலத்தோடு கடலூரில் அருள்மிகு இராமநாத ஈஸ்வரர் திருக்கோயில் மிகத் தொன்மையான சைவத் திருத்தலமாக உள்ளது என்பது ஆச்சர்யமான ஆன்மீகத் தகவல்!

இதே கடலூர் முதுநகரில், காசிக்கு இணையான சைவத் திருக்கோயிலும் அமைந்து அருள் நலம் சேர்க்கின்றது என்பதும் பெருஞ்சிறப்பு இத்தல ஈசனின் திருநாமம் ஸ்ரீ காசிவிசுவநாதர் இத்தல அம்பிகையின் பெயர் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகை.

கடலூர் முதுநகரில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. ஆன்ம ஈடேற்றத்திற்கு அருட் துணை புரிவது. மிகச் சிறிய இராஜ கோபுரம் வரவேற்க, சுற்று மதிற் சுவர்களில் சிவ சிவ என எழுதப்பெற்று உள்ளே நுழைந்ததும் முதலாவதாக தரிசனம் தருவது ஸ்ரீ விநாயகர் சிறிய சந்நிதி அமைத்து அருள் பாலிக்கிறார். சாந்தம் தவழ் அருள் முகம்!
கொடி மரம் கம்பீரமாக காட்சி தருகிறது. இத்தல இறைவன் கிழக்கு திசை நோக்கியபடி ஸ்ரீ காசி விசுவநாதர் சிவலிங்க மூர்த்தியாக, அருளும் அமைதியும் கொண்ட யோக மூர்த்தியாக அருட்காட்சி அளிக்கின்றார் இட பக்கத்தில் - ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகை தெற்கு திசை நோக்கி கருவறை அமைந்துள்ளது அபூர்வம்!

கருணைக் கடலாக, காக்கும் தெய்வமாக நின்றக் கோலத்தில் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகை எழில் நலத்தோடு பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றாள்.
மூலவரின் கருவறைக்கு வலது புறத்தில் விநாயகப் பெருமான் தனி சந்நிதி கொண்டு அருள் பாலிக்கின்றார்.

கோயில் வளாகத்தில் அருள்மிகு கல்யாண வேங்கடேசப் பெருமாள் அற்புதமாக கோயில் கொண்டுள்ளார். இது தனி கருவறையாக இருந்தாலும் தனிக் கோயிலாக மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளது. பெருமாள் சந்நிதியை வணங்கிய படி ஸ்ரீ கருடாழ்வார்! கோயில் பிரகாரத்தில் செங்கமலத் தாயாருக்கு தனி சந்நிதி அமைந்துள்ளது. சொர்க்கவாசல் விழாவில் வைகுண்ட ஏகாதசி உற்சவத்தில் கருடாழ்வார் வாகனத்தில் ஸ்ரீ கல்யாண வேங்கடேசப் பெருமாள் ஸ்ரீ செங்கமலத் தாயாருடன் திருவீதி உலா வரும் அழகே அழகு! கோயில் சுற்றி இடப்பக்கம் வரும் போது ஸ்ரீ முருகப் பெருமான் சந்நிதியை தரிசிக்கலாம். இத்தலத்தில் சந்நிதி கொண்டுள்ள ஸ்ரீ துர்க்கை அம்மன் புன்னகை பூத்த முகத்துடன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பது ரொம்ப விஷேஷம்.
மூலவர் கோயிலின் இடது புற வளாகத்தில் ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ சிவகாம சுந்தரியோடு! ஆடல் வல்லானின் அருள் நடனக் காட்சியோடு தரிசனம் தரும் சந்நிதியை தரிசிக்க கண் கோடி வேண்டும்.
சைவமும், வைணவமும் சங்கமிக்கும் ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் சர்வ சக்தி வாய்ந்த ஆலயமாகும்.

ஆனி திருமஞ்சனம், ஆருத்ரா தரிசனம், மகா சிவராத்திரி, மார்கழி மாத ஆராதனை, நவராத்திரி - சங்கட ஹர சதுர்த்தி, கந்த சஷ்டி பிரமோற்சவம் என விஷேஷ காலங்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகை உடனுறை ஸ்ரீ காசி விசுவநாதர் மும்மை - இம்மை - மறுமை என நம் வாழ்வில் தொடரும் இன்னல்களை போக்கி இனிய வாழ்வை அருளும் தாயுமான தெய்வமே ஸ்ரீ காசி விசுவநாதர்.

கடலூர் முதுநகருக்கு, கடலூர் புது நகர் பேருந்து நிலையத்திலிருந்து தெற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சென்னையில் இருந்தோ அல்லது தமிழகத்தின் முக்கிய நகர்களினருந்தோ ரெயில் மூலமாக கடலூர் வரலாம் கடலூருக்கு நிறைய வாகன வசதிகள் உண்டு.

காலத்தால் முற்பட்டதும், பக்திக் சிறப்பு கொண்டதுமான ஸ்ரீ காசி விசுவநாதர் ஆலயத்தில் சைவத் தமிழ் சொற்பொழிவுகள் அரங்கேறி உள்ளன.

தெய்வத்தமிழ் நெறி உணர்த்தும் செந்தமிழ் இலக்கிய மன்றம் சார்பில் ஆன்மிக சொற்பொழிவுகள் ஏராளமாக நடந்துள்ளன பிரதோஷ காலங்களில் மக்கள் ஆயிரக் கணக்கில் கூடுவதுண்டு சிவ பெருமானுக்கு உகந்த நாட்களில் மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்களும் சிறப்பு ஆராதனைகளும் மிக சிறப்பான முறையில் நடைபெறுவது உண்டு.

காசிக்கு சென்று ஸ்ரீ காசி விசுவநாதரையும் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகையை தரிசிக்க இயலாதவர்கள் கடலூர் முது நகரில் அமைந்துள்ள இத்தலத்தை தரிசித்தாலே போதும்!

காசிக்கு இணையான இத்தலத்தை ஒரு முறை தரிசித்தாலே போதும் பதினாறு முறை காசிக்கு சென்ற புண்ணியம் மட்டுமல்ல, இராமேஸ்வரத்திற்கு சென்று ஸ்ரீ இராமநாத ஈஸ்வரரையும் வழிபட்ட புண்ணியமும் ஒரு சேர பெற கடலூர் முது நகருக்கு வருகை தாருங்கள் வளங்கள் யாவும் பெறலாம்.

## கூடுதல் தகவல்

ஸ்ரீ காசி விசுவநாதரையும் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பிகையும் வழிபட்டால் இல்லறம் நல்லறமாகும்! பட்டப் படிப்பு, பதவி, புகழ், நீண்ட ஆயுள் - தீராத நோய் தீர்த்தல் - செல்வங்கள் பெறவும், திருமணத் தடை நீங்கவும், குழந்தைப் பேறு பெறவும் இத்தல இறைவனையும், இறைவியையும் வழிபட்டாலே போதுமானது. இராஜ யோகம் கூட பெறலாம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்


Yearlong Offerings to Your Ancestors Invoke Immediate & Lasting Relief for You, Your Children and Your Ancestors
Call: 88702 88701

# ஓர் ஆன்மீக அதிசயம் 'சென்னிமலை'

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி, ஓர் ஆன்மீக அதிசயம் 'சென்னிமலை' என்ற தலத்தில் நிகழ்ந்தது, 'சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக' என்ற சொற்றொடரை உள்ளடக்கிய 'கந்த சஷ்டி கவசம்' உருவானது இந்த சென்னிமலை முருகன் ஆலயத்தில் தான்!



மேலே குறிப்பிட்ட ஆண்டில் அன்றைய தினத்தில் அதிகாலை நேரம்! லட்சக் கணக்கான மக்கள் இந்த தலத்தில் கூடியிருந்தனர். மலைப் படிக்கட்டுகள் தொடங்கும் இடத்திலிருந்து இரண்டு புறமும் மக்கள்! மரங்களின் இலை தெரியாவண்ணம் மக்களின் தலை தெரிந்த நிகழ்வு இது மக்களின் தலையால் நிரம்பிய மலை போல் காட்சியளித்தது சென்னிமலை இதெல்லாம் எதனால்?

அன்றிலிருந்து சில வாரங்களுக்கு முன்னால் பக்தர் ஒருவரின் கனவில் வந்த சென்னிமலை வேலவன், இரண்டு காளை மாடுகள் பூட்டிய வண்டி மலையேற வேண்டும் என்று கட்டளையிட, அந்த கட்டளையின் பொருட்டு, வண்டியை ஒரு பக்தரும் இரண்டு மாடுகளை ஒரு பக்தரும் மற்ற உபகரணங்களை சில பக்தர்களும் அளித்தனர்.

அதன் படி, மார்ச் 12, 1984 அன்று காலை 7:30 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட காளை மாடுகள் பூட்டிய அந்த மாட்டு வண்டி அடிவாரத்தில் வந்து நின்றது.

மக்களின் 'அரோகரா' முழக்கம் விண்ணைப் பிளந்தது, வண்டியை ஓட்டுவதற்காக மேலே ஏறி அமர்ந்திருந்தவர் முருக பக்தர் 'சிவன் மலைக்கவுண்டர்' மஞ்சள் துண்டும் பச்சை வேட்டியும் அணிந்த அந்த 60 வயது முதியவர் இந்த ஆன்மீக அதிசயத்தை நிகழ்த்த, முருகன் இட்ட பணி என முனைப்போடு இருந்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள், அறநிலையத்துறை அதிகாரிகள் என அனைவரும் கூடியிருந்தனர்.

சரியாக 7:30 மணிக்கு சிவன் மலைக்கவுண்டர் சொடுக்கியதும் இரண்டு காளைகளும் படியில் ஏறத் தொடங்கின, எப்படி ஏறின தெரியுமா?

காவடி சுமந்து செல்லும் ஒரு பக்தன், எப்படி பக்தி ஆவேசத்துடன் வீறு நடை போட்டு படிகளில் ஏறுவானோ? அப்படி ஒரு வீறு நடை போட்டு காளைகள் ஏறின. வண்டி ஒவ்வொரு படியில் ஏறும் போதும் "அரோகரா" என லட்சக் கணக்கான மக்கள் எழுப்பிய கோஷத்தால் மாடுகள் இம்மியளவும் மிரளவில்லை மிடுக்கோடு நடை போட்டு படியேறின



இந்த சென்னி மலையின் மொத்த படிக்கட்டுகள் 1320! இதனை ஒரு மனிதன் ஏற வேண்டுமென்றால் குறைந்தது இரண்டு, மூன்று இடங்களிலாவது நின்று இளைப்பாற வேண்டும்?

ஆனால், கந்தப் பெருமானின் கருணையால் எங்கும் நில்லாமல், எதற்கும் அசராமல், தொடங்கிய வேகம் எந்நிலையிலும் குறையாமல் 42 நிமிடங்களில் மலை உச்சியில் இருந்த கோவிலை அடைந்தது மாட்டு வண்டி! இந்த அதிசய சாதனை நிகழ்ந்தது எப்படி? யார் காரணம்? வன்மை மிகுந்த கட்டை வண்டி காரணமா? வலிமை கொண்ட காளை மாடுகள் காரணமா? நெஞ்சுரம் மிக்க முதியவர் 60 வயதான சிவன் மலைக்கவுண்டர் காரணமா? இவையெல்லாம் ஒரு காரணமாக இருந்தாலும் முக்கிய காரணம் முருகப் பெருமானின் அருள் தான்!

~ ரா. பன்னீர்செல்வம்




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

**www.priestservices.com**

**போன்: 88702 88701**

# சகல சௌபாக்கியங்களையும் வழங்கும்

# கோமதி சக்கரம்

கோமதி சக்கரம் என்பது வட இந்தியாவில் உள்ள உத்தர் பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் ஓடும் கோமதி ஆற்றங்கரையில் கண்டு எடுக்கப்படும் சங்கு போன்ற ஒரு கல் ஆகும். இது கோமதி ஆற்றின் கரையோராத்தில் எடுக்கப்படுவதால் இதற்கு கோமதி சக்கரம் என்று பெயர் வந்துள்ளது. இது மிகவும் சுபத்துவம் நிறைந்த பொருளாக பார்க்கப்படுகிறது. மகாலக்ஷ்மி தேவியே வாசம் செய்யும் பொருளாக போற்றப்படுகிறது. ஆஞ்சநேயர் ராமபிரானிடம் இருந்து வாங்கிச்சென்று சீதா தேவியிடம் காண்பித்த கணையாழியில் கோமதி சக்கரம் பதிக்கப்பட்டிருந்ததாக புராணங்கள் கூறுகின்றன. கோமதி கக்கரத்தை வாங்கி வீட்டின் பூஜை அறையில் வைத்து பூஜை செய்ய ஆரம்பித்தவுடன் பொருளாதார ரீதியில் நிறைய நல்ல மாற்றங்கள் வருவதை உணர முடியும். இந்த சக்கரத்தை வாங்கி பூஜை அறையிலும் பணம் வைக்கும் பீரோவிலும் வைப்பதினால் செல்வ சேர்க்கை ஏற்படும். அனைத்து பணப்பிரச்சனைகளும் தீரும். செல்வ வளம் மட்டும் அல்லாமல். குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்தும், குடும்ப உறுப்பினர்களிடம் நல்லிணக்கம் கூடும், வாஸ்து தோஷங்கள் நீங்கும், குழந்தைகளுக்கு படிப்பில் நாட்டம் அதிகரிக்கும். கோமதி சக்கரத்தை நம்முடன் வைத்திருப்பதால் அனைத்திலும் வெற்றியை ஏற்படுத்தும். இத்தகைய நன்மைகளை அள்ளித்தரும் கோமதி சக்கரத்தை தினமும் பூஜித்து அனைத்துவிதமான ஐஸ்வர்யங்களையும் பெறுவோமாக.



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மந்திர மகிமை

# சகல சௌபாக்கியங்களும் பெற.

சௌந்தர்ய லஹரியில் அருளப்பட்டுள்ள அனைத்து பாடல்களுமே மந்திர ஆற்றல் பெற்றவை என்பதனை வாசகர்களுக்கு முன்னமே தெரிவித்திருக்கிறோம்.

"சௌந்தர்யம் என்பதனை 'அளப்பரிய அழகு' என்ற பொருளிலேயே பார்க்கிறோம். யாருடைய அழகு? ராஜ ராஜேஸ்வரியாய் உலகையே காத்தருளும் அன்னை அம்பிகையின் உச்சிமுதல் பாதம் வரை உள்ள அழகையே அத்தனை பாடல்களும் அறிவிக்கின்றன.

அந்த வகையில் சௌந்தர்ய லஹரியின் 33 வது பாடல் கல்வி, செல்வம், வீரம் மூன்றையும் ஒருங்கே அருளும் மந்திரமாய் விளங்குவதைக் காணலாம்.



**மந்திரம்:**

"ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம் த்ரிதய - மித - மிதள தவமனோ; நிதாயைகே
நித்யே நிரவதி - மஹாபோக - ரஸிகா;
பஜந்தி த்வாம் சிந்தாமணி - குணநிபத்தாஷ - வலயா; சிவாக்னௌ
ஜுஹ்வந்த ஸுரபிக்ருத தாராஹுதி - சதை;"

இது மந்திரப் பாடல்!

**பாடலின் பொருள்:**

ஆதியும் அந்தமும் இல்லாத அன்னையே! உன் பஞ்சதசாஷரீ மந்திரத்தின் காம பீஜமான "கலீம்" என்ற சொல்லும் புவனேஸ்வரீ பீஜமான "ஹரீம்" என்ற சொல்லும் லக்ஷ்மீ பீஜமான "ஸ்ரீம்" என்ற சொல்லும் இணைந்து இடைவிடாமல் ஜபம் செய்வோர்க்கு அளவில்லா ஆனந்தத்தை அருள்கின்றன. இந்த ஜபத்தின் மூலம் சக்தி முக்கோணத்தில் உள்ள அக்கினியில் நெய்யினால் ஆத்ம ஆனந்தமாக எண்ணிலடங்கா ஆகுதிகளை செய்து உன்னை ஆராதிக்கின்ற அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களையும் அருள்வாயாக!

**மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:**

மேற்கண்ட மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத்தட்டில் வரைந்து கொண்டு, வலக்கையிலே சில நாணயங்களை வைத்துக் கொண்டு ஜபிக்க வேண்டும்.

தினமும் 100 முறை வீதம் 45 நாட்களுக்கு வடக்கு முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும். தாமரை இதழ்களைக் கொண்டு லக்ஷ்மீ சகலஹர நாம அர்ச்சனை செய்தல் நலம்! தேங்காய், வாழைப்பழம், சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம் செய்துவர.

வாழ்க்கையில் கல்வி, செல்வம், வீரம் உள்ளிட்ட சகல சௌபாக்கியங்களும் பெற்று ஆனந்த மயமான வாழ்வினைப் பெறலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# நம்பினோரைக் கைவிடாத குணமுடைய வாராகி

பண்டாசுரன் என்னும் அசுரனின் தோளில் இருந்து விசுக்ரன் என்னும் அரக்கன் தோன்றினான். இவன் கடும் தவமிருந்து மிகப் பெரிய வரம் ஒன்றினை இறைவனிடம் கேட்டான்.

அதாவது, தனக்கு மரணம் ஏற்படுமாயின் அது தாயின் வயிற்றில் பிறக்காத ஒரு பெண்ணால் மட்டுமே ஏற்பட வேண்டும், அந்த பெண் பன்றி முகத்தை உடையவளாக இருக்க வேண்டும்! என்பது அவன் கேட்ட வரம்.

அவன் கடுந்தவத்தை மெச்சிய இறைவனும் இந்த வரத்தை அவனுக்கு அளித்தார்.

தாயின் வயிற்றில் உருவாகாமல் எந்த பெண்ணும் பிறக்க முடியாது. அழகாக இருப்பதை மட்டுமே எந்தப் பெண்ணும் விரும்புவாள். அதிலும் பன்றி முகத்துடன் பிறப்பதை யாரும் விரும்ப மாட்டார்கள் என்பது அவனது உறுதியான நம்பிக்கை அதனால் தான் இப்படியொரு வரத்தை அவன் கேட்டுப் பெற்றான்.



எந்நிலையிலும் தனக்கு இறப்பே கிடையாது என்று நினைத்து தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தான்.

தேவர்களோ இவனது தொல்லையில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாகம் ஒன்றை வளர்த்தனர். அந்த யாக நெருப்பில் கை கால் போன்ற உடல் உறுப்புகளைத் தானமாக வெட்டிப் போட்டு லலிதாம்பிகையை நினைத்து வணங்கினர்.

தேவர்களின் உன்னதமான பக்தியால் ஈர்க்கப்பட்ட லலிதாம்பிகையும் யாகத் தீயிலிருந்து தோன்றி அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்தாள். விசுக்ரனை அழிப்பதற்காக ஒரு பெண்ணைப் படைத்தாள். அப்பெண் பன்றி முகத்துடன் காணப்பட்டாள்.

ஸ்ரீ வாராகி என்று அழைக்கப்பட்ட அந்த தேவியைக் கண்டு மிரண்டான் விசுக்ரன். ஆனாலும் அசுர குணம் உள்ளவன் என்பதால் தனது பயத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு வாராகியை எதிர்த்தான். அரக்கர் குலத்து அமைச்சர்கள் அவன் பின்னே அணிவகுத்து நின்றனர்.

கோடி சூரியனின் பிரகாசத்துடன் ஒளிமயமாகக் காட்சி அளித்த அந்த அசுரப் படையைப் பார்த்து தேவர்கள் பயந்து மிரண்டனர்.

ஆனால் லலிதாம்பிகையின் சிருஷ்டி அல்லவா வாராகி, ஒரேயொரு கணையாக ஏவினாள். அமைச்சர்கள் அனைவரின் கண்களும் அடுத்த நொடிப் பொழுதே குருடாகிப் போனது, பார்வையற்ற அவர்களின் தலைகளைக் கொய்து மாலையாக சூடிக் கொண்டாள். பின்னர் விசுக்ரனைக் கொன்றாள், தேவர்களைக் காப்பாற்றினாள்.

காமதேனுவின் உடலில் தேவர்கள் பலர் வீற்றிருப்பதாக நம் புராணங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே தான் இந்துக்கள் கோபூஜை செய்கிறார்கள். இதன் காரணமாக தேவர்களின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

காமதேனு மட்டுமல்லாமல் சுவேத வாராக மூர்த்தியின் உடலிலும் தேவர்கள் பலர் எழுந்தருளி உள்ளதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. இதனை அடிப்படையாக வைத்து கஜிராஹாவில் அமைந்துள்ள மிகப் பெரிய வாராக மூர்த்தியின் சிற்பத்தின் மீது 274 தேவர்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதை காணலாம். வாராக மூர்த்தியாக இறைவன் காட்சியளிக்கும் பதிகளில் எல்லாம் உள்ளிருந்து செயல்படுவது வாராகி தேவியின் உன்னதமான சக்தியே.
வாராகி சக்தி வழிபாட்டின் மூலம் அச்சம் நீங்கும், தற்காப்பு சக்தி அதிகமாகும், வேத சக்திகள் கிடைக்கும், தீய சக்திகளும் வன்முறைகளும் தலைவிரித்தாடும் இன்றைய காலக்கட்டத்தில் வாராகி தேவி வழிபாடு மிகச் சிறந்தததது .

வாராகி தேவிக்கு என்று தனியாக சன்னதி இல்லாத ஆலயங்களில் சப்தமாதர்களுள் ஒருவராகத் திகழும் ஸ்ரீ வாராகி தேவியை வணங்குவது உகந்தது.
உயிர்களின் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மூல நாயகியாக இருப்பது அன்னை பராசக்தி.

படைப்புக் கடவுள் பிரம்மனுக்கு கலைமகளாகவும், காத்தல் கடவுள் மகாவிஷ்ணுவிற்கு மகாலட்சுமியாகவும், அழித்தல் கடவுள் ருத்திரனுக்கு துர்கையாகவும் துணை நிற்கிறாள்.
பராசக்தியின் சக்தியைப் பெற்றே மும்மூர்த்திகளின் தொழில்களும் சரியாக இயங்கி வருகின்றன.
புத்தி, சம்பத்து, ஞானம், தைரியம், சித்தம், பொறுமை, சாந்தம், காந்தி, சிரத்தை என்னும் நவசக்திகளின் சொரூபிணி பராசக்தி, சக்தியின் துணையின்றி எதுவும் இயங்க முடியாது.
பிராம்மி, ரௌத்ரி, வைஷ்ணவி, மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, நரசிம்ஹி, வாருணி என்னும் பெயரில் நவசக்தியாக விளங்குகிறாள் அன்னை. தாயின் அன்பு தூய்மையானது. அதற்கு ஈடாக உலகில் எதையுமே சொல்ல முடியாது.
கெட்ட குணம் படைத்த குழந்தை இருப்பதுண்டு; ஆனால் கெட்ட அம்மா என்று ஒருத்தி கிடையவே கிடையாது என்கிறது தேவி அபராதக்ஷமாபன ஸ்தோத்திரம் அம்மாவின் அரவணைப்பில் வாழும் குழந்தை, எவ்வளவு வளர்ந்தாலும் இந்த ஸ்பரிசத்தின் உன்னதத்தை மட்டும் உயிர் உள்ளவரை மறப்பதே இல்லை.
நமக்கு சக்தியைத் தருவதும் அன்னை பராசக்தி தான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அன்னையின் சக்தி இருக்கிறது, அதனால் தான் அதனை நம்மால் செய்ய முடிகிறது.

ஆனால் பலர் இந்த உண்மையை உணராமல் எல்லாமே தங்களால் தான் நடப்பதாக இறுமாப்பு கொள்கிறார்கள். அகந்தை அடைகிறார்கள்.

பராசக்தியின் படைத் தலைவி தான் வாராகி.
இவளுக்கு சதுரங்க சேனா நாயகி என்ற பெயரும் உண்டு. அதாவது அம்பிகையின் நால்வகைப் படைகளுக்கும் சேனாதிபதியாகத் திகழ்பவள் என்று பொருள். இவளுக்கு தண்டனி என்ற பெயரும் உண்டு. பன்றி முகத்துடன் காட்சி தரும் வாராகி தேவி, பராசக்தி அம்பாளின் முக்கிய பொறுப்பாளர். எருமையை வாகனமாகக் கொண்ட வாராகி, பெண் தெய்வம்.
மூன்று கண்களைக் கொண்டதால் சிவனின் அம்சமாக இருக்கிறாள், வாராக முகத்தைக் கொண்டதால் திருமாலின் அம்சமாகவும் இருக்கிறாள்.
மிருக பலத்தைக் கொண்டவள், குணத்தில் தேவ குணம் படைத்தவள்.
எதையும் அடக்கி ஆளும் வல்லமை வாராகிக்கு உண்டு. தன்னை நம்பியவர்களின் துயரங்களைப் போக்கி, ஊழிக் காலத்தில் உலகைப் பாதுகாத்த பெருமை படைத்தவள்.
திருமால் வாராக அவதாரம் எடுத்தபோது பெரிதும் துணை புரிந்த பெருமைக்கு உரியவள் வாராகி அம்மன். இவளின் ஒப்பற்ற துணை இல்லாமல் வாராக மூர்த்தி, உலகைத் தன் கோரைப் பற்களால் தாங்கி இருக்கவே முடியாது.
துடிப்பான சக்தி மிக்க இவள், தேவர்கள், அசுரர்கள் மற்றும் மனிதர்களால் போற்றப்படுகிறவள்.

~ திருமதி. அன்னபிரிய லட்சுமி




# மூலிகை ரகசியம்

## தொட்டால் சுருங்கி

இந்த இதழ் மூலிகை ரகசியம் பகுதியில நம்ம சத்வித்யா வாசகர்களுக்கு நாம் அறிமுகம் செய்யவிருக்கும் மூலிகை தொட்டால் சிணுங்கி என்று வழக்கு மொழியில் கூறப்படும் தொட்டால் சுருங்கி எனும் மூலிகை

பொதுவாக, மாந்திரீகம் கற்றவர்கள் இந்த தொட்டால் சுருங்கி செடியின் வேரை பிரம்ம முகூர்த்த வேளையில் மந்திரக் கட்டுடன் எடுத்து, தாயத்தில் அடைத்து பூஜைகள் செய்து கொடுப்பார்கள். எனவே, இது ஏதோ ஒரு மந்திர மகிமை வாய்ந்த தாவரம் என்றே பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இதையெல்லம் மீறி இந்த செடிக்கு மூலிகை மகத்துவம் நிறைய உள்ளது என்பதும் நம் உடலில் ஏற்படும் பல வகையான நோய்களை, நோய்களால் ஏற்படும் வலி, வேதனை இவற்றினை தவிர்க்கும் சக்தி இந்த தொட்டால் சுருங்கி தாவரத்திற்கு உண்டு என சித்தர்கள் ஏட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மூலிகையைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

### குணமாக்கும் நோய்கள்:

பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகள், இடுப்புவலி, விரைவாதம், சிறுநீரகக்கல், சிறுநீர்ப்பாதை எரிச்சல், கீல் வாதம், ஆண்மைக் குறைபாடு, அல்சர், மூலம் இப்படி பலவித நோய்களை குணமாக்குகிறது இந்த தொட்டால் சுருங்கி.



### பயன்படுத்தும் முறை:

இதன் இலைகளை கைப்பிடியளவு எடுத்து களிமண் அல்லது புற்றுமண் கைப்பிடி அளவோடு கலந்து விழுதாக அரைத்து இரவில் விரைவீக்கம் உள்ளவர்கள் போட்டு வர விரைவாதம், வீக்கம் குணமாகும். கீல் வாதமும் குணமாகும். இலைகள் மற்றும் வேரை சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடி செய்து வைத்து பாலில் கலந்து குடித்து வர மூலச்சூடு குறையும் சிறுநீர்ப் பாதையில் உள்ள நோய்கள் குணமாகும். ஆண்மை பலத்தை அதிகரிக்கும்.

இலைகளை அரைத்து மோரில் கலந்து குடித்து வர கோடை காலத்தில் ஏற்படும் நீர் சுளுக்கு சரியாகும் இலையை கைப்பிடி அளவு பச்சையாய் எடுத்து எலுமிச்சை சாறோடு கலந்து மூன்று வேளை குடிக்க அல்சர் குணமாகி, சீதோஷ்ண நிலை உடலில் சீராகும்.

அரிய பல ஆற்றல்களைக் கொண்ட இந்த மூலிகை மழைக்காலங்களில் நீர் நிலைகளில் வளரும் தன்மை கொண்டது, ஊதா, மஞ்சள் என இரு நிறங்களில் பூக்கள் உள்ள இதனை பலனறிந்து பயன்படுத்த வேண்டும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# சித்திக்கும் ஞான வாழ்வே தித்திக்கும்

ஒரு தாயின் மணி வயிற்றிலிருந்து பிறக்கின்ற நாம் இறக்கும் வரையில் எத்தனை நிகழ்வுகள்! அசை போடுவோம் '..

கருவில் வளரும் போதே தாய்மையின் இறைமையை உணர்கின்றோம்'

மிகுந்த பாதுகாப்பான இனிய உறவு மட்டுமல்ல இணையற்ற உறவே தாய் உறவு!

சர்வேஸ்வரனையே தாயுமானவர் என்று வழிபடுகின்றோம். மழலைப் பருவத்தில் தாயை நாமும் பிரிவதில்லை தாயும் நம்மை பிரிவதில்லை.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை என்பர். அதனால் அன்றோ நமக்கு எவ்வளவு அகவை கூடினாலும்



தாயின் பரிவை எண்ணி குழந்தை போல் அழுகின்றோம்.

வாழ்வின் உச்சத்தை அடைந்தவர்களை கேட்டால் எல்லாமே வெறுமை என்கிறார்கள். பெருமை எதுவும் இல்லை என்கிறார்கள் கரையோர அலைகள் போடும் ஒலிகளை ஆரவாரத்துடன் ஓடிக் கொண்டிருக்கிற மனிதர்கள் எவ்வளவு தான் பெற்றாலும் மனம் நிறைவதில்லை.

ஆசை தீர என்று வாழ்கிற வாழ்க்கை அல்லல் தருகின்ற வாழ்கை! ஆசை ஒரு நாளும் தீரப் போவதில்லை அலைச்சல் தான் கண்ட பலன்! மரத்திற்கு மரம் தாவும் குரங்குகள் போன்று மனித மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது! மலையளவு பொருள் சேர்த்தும் என்ன பயன்? கடுகளவாவது துணை செய்யுமா? இவ்வுலக வாழ்வை நிறைவு செய்யும் போது எதுவுமே உடன் வரப் போவதில்லை.

"காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்றார் பட்டிணத்து அடிகள்.

மாட மாளிகைகளில் கூட கோபுரங்களில் பட்டு மெத்தைகளில் சயனிப்பவர்களும் சரி, வீதியோரங்களில் உறங்குபவர்களும் சரி எவராக இருந்தாலும் மரணத்தை வெல்ல முடியாது என்பது தானே பேருண்மை? ஆசை எதற்காக? சிந்தித்து பார்த்தோமேயானால் எல்லாமே வெறுமை தான். எப்படி பிறந்தோமோ அப்படியே விடை பெறுகின்றோம்.

வாழுங்காலத்தில் எத்தனை நல்ல செயல்கள் எத்தனை தீய செயல்கள் எத்தனை இன்ப நிகழ்வுகள் எத்தனை துன்ப நிகழ்வுகள் எத்தனை போட்டி பொறாமைகள், எத்தனை பொய் பித்தலாட்டங்கள் அப்பப்பா - அவ்வளவும் ஆடி முடித்து விடுகின்றோம்.

திரைப்படங்களில் வணக்கம் போடும் போது திருந்தி என்ன லாபம்? வாழும் போதே திருந்துவதற்கு முயலலாமே!
கர்ணனைப் போல், கடையெழு வள்ளல்களைப் போல் வாழவிட்டாலும் களவு செய்யாமல் வாழலாமே. நேர்மையாக வாழ முற்படலாமே தெய்வத்தை இகழாமல் தெய்வ பக்தியோடு வாழ்வை தொடங்கலாமே! எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதி அருள் வாழ்வு வாழ்ந்த அருட்பிரகாச வள்ளலார் மரணமிலா பெருவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மகா அற்புதத்தை வடலூரிலே உணர்கின்றோம்.
தயவின் தத்துவத்தை உணரும் போது தான் நம்மைப் பற்றி நமக்கே புரியத் தொடங்கும் நமக்காக மட்டுமே இரண்டு கைகளால் அள்ளிப் போடுகின்ற சுய நலவாதியாக இல்லாமல், ஒரு கையாலாவது அடுத்தவர்களுக்கு கொடுக்க பழகுங்கள்.
"ஆசை அறுமின் ஆசை அறுமின் - ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்" என்பார்கள் அருளாளர்கள். ஏமாறுவதும் தவறு தான்! ஏமாற்றுவதோ பெரும் பாவம் மட்டுமல்ல மிகப் பெரிய தவறு.

சுய நலங்கள் வியாபிக்கும் போது எல்லாமே தம் கட்டுக்குள் வரவழைக்க துடிக்கின்றோம். எவ்வளவு காலம் நம் கட்டுக்குள்ளே இருக்கும்? கூட்டுக்குள்ளே உயிர் பறவை இருக்கும் வரை தானே?
மனித நேயம் மரித்துப்போன பின்பு தானே திண்ணங்கள் இடிந்தன - கடவுளாகவே வழிபட வேண்டிய முதியவர்களை குப்பைகளாக கருதும் அளவிற்கு தள்ளப்படுகின்ற சோகங்களை என்ன வென்பது? இதுவே இறைவன் உறையும் ஆலயம் என்று சுட்டிகாட்டி - நம் பிஞ்சுக் கரங்களை பரிவுடன் பிடித்துச் சென்ற நாம் தெய்வங்களான தாய் தந்தையை தெருவில் விடலாமா?
அறுசுவை உணவை உண்ணுவதற்கு முன் ஒரு வேளை உணவுக்குக் கூட வழியற்ற ஆதரவற்ற குழந்தைகள் முதியோர்கள் வயிற்றுப் பசியை சிந்தித்து இருக்கின்றோமா?
ஆலயம் என்றால் ஆன்மாக்கள் லயக்கக் கூடிய இடம் என்பார்கள் அருளாளர்கள்!
நாமும் ஆலயம் தான்! நம் உடம்பும் உள்ளமும் பிரகாரங்கள் தான் நாம் எத்தனை பேரை லயிக்க வைத்தோம் என்ற வினாவை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்
மனிதன் புனிதன் ஆகும் போது தான் போற்றப் படுகின்றான் புகழப்படுகின்றான்'.
எந்த ஒரு புனிதனும் மனிதனாக இருக்கும் போது தம்மை பெருமையாக நினைத்ததாக சான்று இல்லை. ஆனால் நாமோ வெற்று ஆர்ப்பாட்டம் கொண்டு உலகையே ஆட்டிப் படைக்க துடிக்கின்றோம் அது இயலுமா? எல்லாம் செயல் கூட வைப்பது இறைவனால் மட்டுமே என்பதை உணர்ந்தாலே போதும் ஞான வாழ்வு நமக்கும் சித்திக்கும்! வாழும் வாழ்வும் தித்திக்கும்!.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# நரசிம்மருக்கும் பிரதோஷ வழிபாடு

பிரதோஷ தினங்களில் மாலை 4: 30 முதல் 6 மணி வரை அனைத்து சிவாலயங்களிலும் பிரதோஷ வழிபாடு என்பது அபிஷேக, ஆராதனைகளோடு நடைபெறுவது வழக்கம் என நம் அனைவருக்குமே தெரியும்.

அதே போல நரசிம்மர் ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன! இரண்யனை வதம் செய்ய திருமால் எடுத்தது இந்த நரசிம்ம அவதாரம்! இது, மனிதனுமின்றி மிருகமுமின்றி இரண்டும் சேர்ந்த உருவம்! நிகழ்ந்தது' பகலுமில்லை, இரவுமில்லை, உள்ளேயுமில்லை; வெளியேயுமில்லை; பூமியிலும் இல்லை; ஆகாயத்திலும் இல்லை! ஆயுதம் ஏதும் கையில் இல்லை!

நரசிம்மர், இரண்யனை வதம் செய்த நேரம் மாலை 4:30 மணியிலிருந்து 6 மணிக்குள்! இது பிரதோஷ நேரம்!

தூணில் தோன்றி பிரகலாதனின் துன்பம் தீர்த்த நரசிம்மரை பிரதோஷ வேளையில் வழிபடுவதும் சிறப்பு தானே!?



~ ரா. பன்னீர்செல்வம்

# வெற்றி மற்றும் காரிய சித்தியை தரும்
# சுப்ரமணிய எந்திரம்

வெற்றிக்கொடிகட்டு என்ற சொல்லுக்கு ஏற்றார் போல் கையில் வெற்றிக்கொடியை ஏந்தி இருக்கும் தெய்வம் முருகக்கடவுள் ஆவார். முருக வழிபாடு ஒன்றே தன்னம்பிக்கையற்ற மனிதர்களுக்கு தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தரக்கூடிய ஒன்றாக அமைகிறது. நவகோள்களில் வீரம், வீரியம் மற்றும் பாக்கிரமத்தை சுட்டிக்காட்டுவது செவ்வாய் கிரகமாகும். கோள்களில்லேயே போர்படை தளபதி என்ற அந்தஸ்தை பெற்று இருப்பவரும் செவ்வாய்தான். கடன், நோய், வீடு, நிலம் மற்றும் எதிரியை குறிக்கும் கிரகமும் செவ்வாய் ஆகும். செவ்வாய் கிரகத்திற்கு உரிய தெய்வம் முருகக்கடவுள் ஆவார். முருகக்கடவுளை வழிபடுவதால் சொத்து சேர்க்கைகள் கூடும், கடன் பிரச்சனை முடிவுக்கு வரும், மன தைரியம் கிடைப்பதுடன் எதிரியை வெல்லும் ஆற்றல் உண்டாகும். இது மட்டும் அல்லாமல் நமது குறிக்கோளை அடைவதற்கும் முருகக்கடவுள் வழிபாடு சிறந்ததாகும். மேலே குறிப்பிட்டுள்ள அத்துனை அம்சங்களையும் அருள்வதற்கு முருகப் பெருமானுக்கு உரிய சுப்ரமணிய எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் செவ்வரளி பூவை கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேலே கூறிய அனைத்து விசயங்களையும் எளிதில் நிறைவேற்றி கொள்வதுடன் நாம் நினைக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகச் செய்ய முடியும்.

**சுப்ரமணிய எந்திரத்திற்குறிய மந்திரம்:**

ஓம் சவும் சரவணபவாய நமஹ




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# குல தெய்வம்

தங்கப்பன் அந்த கிராமத்திலேயே நேர்மை தவறாத விவசாயி! நிறைய நிலபுலன்கள்! வேலை செய்யும் பண்ணையாட்களைக் கூட தன் உடன்பிறப்பாய் நினைத்து அனைத்து வசதிகளையும் செய்து தருபவர். ஓரளவுக்கு நல்ல வசதியானவர். ஊருக்குள் நல்ல மதிப்பு மிக்கவர். அத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசாய் அன்பு மகள்! கிராமத்துப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படிக்க வைத்து இப்போது வீட்டோடு வைத்து அழகு பார்த்து வருகிறார்.

இதே ஊரில் தங்கப்பனை மிஞ்சிய சொத்தும் வசதியும் மிக்கவர் கருணாமூர்த்தி! வசதி எவ்வளவு அதிகமோ அந்தஅளவுக்கு தலைக்கனம் மிகுந்தவர்! தான் மட்டுமே உயர்ந்தவன் என்ற மமதையோடு வாழ்பவர்! அவருடைய ஒரே மகன் பக்கத்து டவுனில் படிப்பை முடித்து விட்டு, கிராமத்து அரிசி மில்லை நிர்வாகம் பார்த்து வந்தான்.



இரண்டு குடும்பத்துக்கும் இரண்டு தலை முறைகளாக பகை! ஊரில் இருபெரும் குடும்பங்களாக இருந்தாலும் இரண்டு குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தை கிடையாது! ஊரின் ஒட்டுமொத்த மரியாதையும் தனக்கே கிடைக்க வேண்டும்; அதற்கு தனக்கு இணையாக உள்ள தங்கப்பனின் சொத்தை தனதாக்கிக் கொள்ள வேண்டும் என முடிவெடுத்தார் கருணாமூர்த்தி! தன் குடும்பப் பங்காளிகளில் பெரியவர் ஒருவரை அணுகி, தங்கப்பன் குடும்பத்தோடு தலை முறை பகை இனிமேல் தொடர வேண்டாம். சம்பந்தம் செய்து கொள்ளலாம் என்ற தன் விருப்பத்தை பெரியவரிடம் சொன்ன கருணாமூர்த்தி, அவரை தங்கப்பனிடம் சம்பந்தம் பேச வருவதாக சொல்லி அனுப்பினார்.

அந்த பெரியவர் தங்கப்பனிடம் சென்று செய்தியை சொல்ல, யாரிடமும் எதற்கும் பகைமை பாராட்ட விரும்பாத தங்கப்பன் மகிழ்ச்சி அடைந்தார்!
தங்கப்பனின் மனைவியோ, "இத்தன வருஷமா பேச்சு வார்த்த இல்ல, ஜாடமாடையா கூட பேசினதில்ல,


இப்ப பொண்ணு கேட்டு வர்றதா சொல்லியிருக்காரே'. எப்படி மனசு மாறினாங்க!" எனக்கேட்க தங்கப்பன், "எதுவா இருந்தா என்ன? பழைய பக இன்னுமா மனசுல நிக்கும்? எல்லாம் நல்லதுக்குனே நெனப்போம்!" என சமாதானமாய் பேசினார்!
தங்கப்பன் வீட்டுக்கு வந்த கருணாமூர்த்தி குடும்பத்தினர் பாக்கு, வெற்றிலை மாற்றி பரிசமும் போட்டார்கள்!



ஊரே வியப்பில் ஆழ்ந்தது! இருபெரும் குடும்பங்கள் இணையப் போவதைப் பற்றி பேசாதவர்கள் யாரும் இல்லை!

பெண்ணின் ஜாதகத்தை ஜோதிடரிடம் காட்டி, அபிப்பிராயம் கேட்கலாம் என்று சொன்ன தன் மனைவியின் யோசனையை தங்கப்பன் நிராகரித்தார்.
"நாம கும்பிடற சாமி நம்பள கைவிடாது! ரெண்டு தலைமுறையா இருந்த பகை ஒழியுதே அதுவே நல்ல சகுனந்தானே? இதல ஜோசியம் எதுக்கு கேட்டுகிட்டு?" என பெருந்தன்மையோடு சொன்னார்!
ஆனால் கருணாமூர்த்தியின் எண்ணமோ வேறு மாதிரி இருந்தது, "திருமணம் முடிந்த சில நாட்களிலேயே சொத்தைக் கேட்டு வாங்கி, தங்கப்பனை குடும்பத்தோடு தெருவில் நிறுத்த வேண்டும்", என நினைத்து உள்ளூர சந்தோஷப் பட்டார்!

திருமணம் நெருங்கி வந்து கொண்டிருந்தது! எந்த சூழ்நிலையிலும் தன் குல தெய்வ வழிபாட்டை கைவிடாத தங்கப்பன், தன் பங்காளிகள் மற்றும் சம்பந்தியாகப் போகும் கருணாமூர்த்தியின்



குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு 30 கல் தொலைவில் இருந்த தன் குல தெய்வ கோவிலுக்கு சென்றார் பொங்கல் வைத்து, பூஜைகள் செய்து, குலதெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தது! அம்மன் தன்னைப் பார்த்து சிரித்தபடி இருப்பதாக எல்லோரிடமும் சொன்னார் தங்கப்பன் மண்டபத்தில் எல்லாரும் சாப்பிட அமர்ந்தார்கள் எல்லோருக்கும் இலைபோட்டு பொங்கலை பரிமாறிய படியே வந்த தங்கப்பனின் மனைவி, "மாப்பிள்ளைய எங்கே காணோம்!?" என்றாள்.

அப்போது தான் எல்லாருக்குமே தெரிந்தது, கருணாமூர்த்தியின் மகன் இங்கே இல்லை என்று!
"சுந்தரம் எங்கடா போனான்?" என தன் மைத்துனர் ஒருவரைக் கேட்டார் கருணாமூர்த்தி!
"ஒன்னும் இல்ல மாமா! வயித்தக் கலக்கற மாதிரி இருக்குனு அந்தப் பக்கமா போனான்! இப்ப வந்துடுவான்!" என்றார் அவர்.

"யாராவது போய் பாருங்கப்பா!" என்று குரல் வர, கருணாமூர்த்தியின் மைத்துனர் ஓடினார் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அய்யோ'..மச்சான்!" என்றொரு கூக்குரல்! எல்லோரும் பதறி எழுந்து ஓடினார்கள்.
கோவிலைச் சுற்றிலும் வயக்காடு புதர், மரம்! அங்குதான் ஒதுங்கப் போனான் கருணாமூர்த்தியின் மகன் சுந்தரம்! அங்கு கருநாகம் தீண்டி, வாயில் நுரை தள்ளி விழுந்து கிடந்தவனைக் கண்டு ஒரே ஒப்பாரி, ஓலம்!
தங்கப்பனும் மனம் நொந்தார்! ஆனால், குல தெய்வம் அவரைப் பார்த்து சிரிப்பது போலவே இருந்தது!

~ ரா. பன்னீர்செல்வம்




# மார்ச் 15 – 31 ராசி பலன்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- இளம் காதலர்கள் தனது துணையின் மூலம் பரிசுப்பொருள் கிடைக்கப் பெறுவார்கள்.
- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- தாய் வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.
- பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் எளிதில் வெற்றி பெறலாம்.
- போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் வெற்றியை காண கடுமையாக உழைக்க வேண்டும்.
- சுய தொழில் செய்பவர்கள் அதிகமான லாபங்களை பெறக்கூடிய மாதமாகும்.
- வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- உத்தியோகத்தில் இருக்கும் அன்பர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். கடினமாக உழைத்தாலும் சிறிய அளவில் தான் அதற்குரிய பலனைப் பெற இயலும்.



# ரிஷபம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பொழுதை போக்க பூங்கா, சினிமா தியேட்டர் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வீர்கள்.
- வீடு வாங்கல் விற்றல் துறையில் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த பலன்களைக் காண்பார்கள்.
- தங்களின் சரியான தொழில் முதலீடுகளின் மூலம் சிறந்த லாபத்தை அடைய முடியும்.
- தொழில் சார்ந்த பேச்சு வார்த்தைகள் நடக்கும் போது வாக்கு வாதங்களில் ஈடுபடாதீர்கள்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- தொழில் அல்லது வியாபாரம் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். மேலதிகாரிகள் உங்களின் செயல் திறனைப் பாராட்டுவார்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.



# மிதுனம்

- நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உண்மையான அன்பு செலுத்துவீர்கள். இதனால் மனதில் மகிழ்ச்சி பொங்கும். நீங்கள் உங்கள் துணையையும் அவரின் உணர்வுகளையும் புரிந்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவைப் பேண இயலும்.
- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் இருக்கும். அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும். இந்த மாதம் உறவு நிலைகளைப் பொறுத்த வரை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.
- நீங்கள் ஊடகங்களில் பணி புரிபவர் என்றால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமான நேரம் என்று கூறலாம். நீங்கள் மற்றவர்களின் கருத்து மற்றும் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து கொள்வீர்கள்.
- உங்கள் வருமானத்தைப் பெருக்கும் புதிய வழிமுறைகளை நீங்கள் நாடுவீர்கள். பொருளாதார நிலை மேம்படும்.
- நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற நேரமாக இருக்கும்.
- மாணவர்களுக்கு கவனம் தவற வாய்ப்பு உள்ளது என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும்.
- உயர் கல்வி படிக்கும் மாணவர்களின் கிரகிக்கும் திறன் மேம்படும்.
- ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்றாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும். அஜீரணக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.



# கடகம்

- காதலர்களிடையே அன்னியோன்யம் பெருகும்.
- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.
- உங்கள் பணப்புழக்கம் இந்த மாதம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றாலும் நீங்கள் செலவு செய்ய மாட்டீர்கள்.
- சுயதொழிலில் இந்த மாதம் மந்த நிலை காரணமாக நீங்கள் கடின உழைப்பை மேற்கொள்ள மாட்டீர்கள். உங்கள் மனது ஊக்கத்துடன் இருந்தாலும் உங்கள் உடல் நிலை ஓய்வை நாடும். எனவே மற்றவர் உதவியுடன் நீங்கள் பணிகளை மேற்கொள்வது சிறப்பு.
- இந்த மாதம் உங்கள் தொழிலில் போட்டிகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தொழிலில் வளர்ச்சி இருக்க வாய்ப்பு இருக்காது.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலங்களில் இருந்த நோய் மீண்டும் தலை தூக்க வாய்ப்புள்ளது. எனவே மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது. உடற் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும்.



# சிம்மம்

- காதலில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவி உறவு வாலுப்படும். குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் நிலவும்.
- இந்த மாதம் கிரகங்களின் அனுகூலமான  நிலை காரணமாக உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள  நீங்கள் புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீங்கள் ஆன்மீகக் காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ள அன்பர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவீர்கள்.
- இந்த மாதம் நீங்கள் எதையும் யதார்த்தமாக எதிர் கொள்வீர்கள். மனதில் பட்டதை பளிச்சென்று கூறிவிடுவீர்கள்.  எனவே பிரச்சினைகளை சந்திக்க நேரும்.
- மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- உயர்கல்வி படிப்பு படிக்கும் மாணவர்கள் சில தடைகளை சந்திப்பார்கள். கல்வியில் கவனம் சிதறும். பொழுதுபோக்கில் மனம் ஈடுபடும்.
- சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.



# கன்னி

- உங்களில் சிலருக்கு புதிய காதல் மலரும். இந்த மாதம் காதல் உறவு இனிமையாக இருக்கும்.
- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இதனால் இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும்.
- புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்கள் மூலம் நீங்கள் உதவி பெறுவீர்கள்.
- உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்தில் எந்தவித தடையும் இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.
- உங்கள் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- பங்கு நிறுவனங்களில் முதலீடு செய்ய இந்த மாதம் ஏற்ற காலமாக இருக்கும்.
- உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு பேராசிரியர் மற்றும் பெற்றோரின் ஆதரவு உண்டு. சிறப்பாக கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- படித்து முடித்து வேலை தேடும் மாணவர்கள் சிறந்த சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கப் பெறுவார்கள்.
- வெளிநாடு சென்று படிக்க நினைக்கும் மாணவர்களின் விருப்பம் நிறைவேறும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# துலாம்

- காதல் உறவு சிறப்பாக இருக்கும்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிமித்தமான பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். புதிய பொறுப்புகள் உங்களுக்கு அளிக்கப்படும்.
- உங்கள் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்விற்கு நீங்கள் இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருக்க வேண்டும்.
- சட்டம் பொருளாதாரம் மற்றும் தொழில் சார்ந்த கல்வியில் போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் சிறந்த வெற்றி காண்பார்கள்.
- வியாபரிகள் சிறந்த லாபம் காண்பார்கள். உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும் மாதமாக இந்த மாதம் இருக்கும்.
- புதிய தொழில் முதலீடுகளை செய்ய இந்த மாதம் உகந்தது.
- மருத்துவத் தொழில், சட்டம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் கணிசமாக பணம் சம்பாதிப்பார்கள்.
- புதிய தொழில் வாய்ப்புகள் மூலம் உங்கள் வருமானம் பெருகும். கடன்கள் அடையும்.
- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.
- மேல் படிப்பு வேண்டி வெளி நாடு செல்ல விரும்பும் மாணவர்களுக்கு இந்த மாதம் பொன்னான வாய்ப்பு கிட்டும் மாதமாக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



# விருச்சிகம்

- காதல் உறவில் அன்யோன்யம் கூடும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்கள் இந்த மாதம் மனதிற்குப் பிடித்த தக்க துணையைக் கண்டு கொள்வார்கள். தம்பதிகள் கருத்தொருமித்து வாழ்வீர்கள்.
- பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பது சிறிது கடினமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் விடா முயற்சி என்ற கொள்கையை பின்பற்றினால் வெற்றி பெற இயலும்.
- உத்தியோகத்தில் பதவி உயர்வு கிட்டும் என்றாலும் அது உங்களுக்கு மன திருப்தியை அளிக்காது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் சில சவால்களை சந்திக்க நேரும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகள் மூலம் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். அதனால் உங்கள் இலக்குகளை அடைய இயலாமல் போகலாம். நீங்கள் திறமையுடன் செயல்பட்டால் தான் வெற்றி காண இயலும்.
- இந்தமாதம் உங்கள் பொருளாதார நிலையில் சற்று இறக்கம் காணப்படும்.
- மனபதட்டம் காரணமாக இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். வீட்டிலும், அலுவலகத்திலும் அதிக பணிகள் காரணமாக உங்கள் உடல் நிலை பாதிக்கப்படும்.



# தனுசு

- காதல் உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நீங்கள் உறவில் அமைதியை தக்க வைத்துக் கொள்ள இயலும்.
- உங்கள் வாழ்க்கைத் துணையுடன் கருத்து ஒருமித்து உறவை மேம்படுத்த நீங்கள் விரும்புவீர்கள். என்றாலும். பண விஷயம் அல்லது பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினை காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் சாதகமான பலன்களை எதிர்பார்க்கமுடியாது. உங்கள் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காது. அதன் காரணமாக நீங்கள் உற்சாகம் இழக்கலாம்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும். தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- மாணவர்களுக்கு சென்ற மாதத்தை விட இந்த மாதம் சிறப்பானதாக இருக்கும். என்றாலும் நீங்கள் கவனச் சிதறலுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும். நீங்கள் சிறப்பாக கல்வி பயிலவும், கடின உழைப்பை மேற்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுவீர்கள்.
- ஆராய்ச்சி கல்வி படிக்கும் மாணவர்கள் வெற்றி காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது. உங்கள் வாழ்க்கைத் துணையின் ஆதரவு உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.



# மகரம்

- காதலர்கள் தங்களின் வாழ்க்கைத் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச்  சென்று மகிழ்விப்பதற்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். இதனால் இருவருக்கும் இடையே அன்பும் நெருக்கமும் அதிகரிக்கும்.
- திருமணம் தாமதம் ஆனவர்களுக்கு திருமண முயற்சிகள் கைகூடும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இந்த மாதம் தங்களின் முயற்சிகளுக்கு பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயலதிறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடக்கும்.
- சுய தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் கூடும்.
- பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். மாணவர்கள் பதட்டமின்றி செயல்படுவார்கள்.
- தொழில்  நுட்பத் துறை மாணவர்கள் கவனம் செலுத்தி கல்வி பயில்வார்கள்.
- முதுகலை பட்டம் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் வெற்றி காண்பார்கள்.
- மலச்சிக்கல் போன்ற வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.



# கும்பம்

- காதல் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இந்த மாதம் காதல் உறவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.
- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். உங்கள் வாழ்க்கைத் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- புதிய பணிகள் மற்றும் பொறுப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் செயல் திறன் பிறரால் பாராட்டப்படும்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும்.
- சுயதொழில் செய்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- உயர் கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.



# மீனம்

- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் தக்க துணை தேட உகந்த மாதம் ஆகும்.
- திருமணமான தம்பதிகள் இடையே கருத்து வேறுபாடுகள் குறைந்து நெருக்கம் அதிகரிக்கும்.
- குடும்பத்தில் அமைதி நிலவ  நீங்கள் சண்டை மற்றும் வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வருமானம் உயரக் காண்பீர்கள்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் நாட்டம் அதிகரிக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும்  உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.
- சொத்து அல்லது உயில் சம்பந்தமாக ஏதேனும் சட்டச் சிக்கல்கள் இருந்தால் அவை இந்த நேரத்தில் முடிவுக்கு வரும்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**